08.07.2025

**வா.சா.1**

**திருமதி கலையரசி**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

என் தாயாரும் என் சகோதரி எழிலரசியும் நாகப்பட்டினம் மாவட்ட நீதிமன்றத்தில் குடும்ப சொத்துக்களை பொறுத்து பாகப் பிரிவினை பரிகாரம் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்தார்கள் எனவும் அந்த அசல் வழக்கானது மாற்றலாகி திருவாரூர் முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் அ.வ.எண் 24/2008 ஆக கோப்பில் எடுக்கப்பட்டது என்றால் சரி. அந்த வழக்கில் என்னுடைய சகோதரர் எதிர் வழக்குரை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரி. 13.03.2001ல் அங்காளம்மை தன்னுடைய பேரன் இனியவனுக்கு உயில் எழுதி வைத்த விபரத்தை மேற்படி பாகப் பிரிவினை அசல் வழக்கில் தாக்கல் செய்த எதிர் வழக்குரையில் குறிப்பிட்டுள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நாங்கள் மூவரும் சேர்ந்துதான் பாகப் பிரிவினை பரிகாரம் கோரி என் சகோதரர் மீது வழக்கு தாக்கல் செய்தோம். எனக்கும் என் சகோதரருக்குமிடையில்

ஆரம்ப காலத்திலிருந்து சுமூக உறவு கிடையாது. நான் கோயம்புத்தூர், சிதம்பரம் ஆகிய ஊர்களில் மாறி மாறி வசித்து வருகிறேன். என்னுடைய கணவரும் கோயம்புத்தூர், சிதம்பரம் ஆகிய ஊர்களில் என்னுடன் வசித்து வருகிறார். என்னுடைய சகோதரர் கிராமத்தில் வசித்து வருகிறார். என்னுடைய பாட்டி அங்காளம்மை உயிருடன் இருந்த காலத்தில் என்னுடைய சகோதரரும் 2-ம் பிரதிவாதியுமான அன்பரசனுக்கு ஒரு பொது அதிகார ஆவணம் எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் எழுதி கொடுக்கவில்லை. அங்காளம்மை எழுதி கொடுத்த பொது அதிகார ஆவணம் பேரளம் சார் பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண் 18/94 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. நான் வழக்கிற்காக அவ்வாறு எழுதிக் கொடுக்கவில்லை என பொய்யாக சொல்கிறேன் என்றால் தவறு. 1994 ல் எழுதி கொடுத்த பொது அதிகார ஆவணத்தின் அடிப்படையில் நாளது வரை பிரதிவாதிகளின் அனுபவத்தில்தான் வழக்கு சொத்துக்கள் இருந்து வருகிறது என்றால் தவறு. 2002 ல்தான் என்னுடைய தாயார் வழக்கு சொத்தை எனக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்தார். 12.04.2022 ல் அங்காளம்மை எனக்கு எழுதிக் கொடுத்ததாக சொல்லப்படும் தான செட்டில்மெண்ட் ஆவணத்தின் அடிப்படையில் எனக்கு சொத்தின் அனுபவம் கொடுக்கப்படவில்லை எனவும் மேற்படி ஆவணம் என் சகோதரர் மீது பாகப்

பிரிவினை வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் இருந்த சூழ்நிலையில் விரோதம் கொண்டு விரோதத்தின் அடிப்படையில் எந்தவித அனுபவமும் இல்லாமல் நானும் என் தாயாரும் பெயரளவில் ஏற்படுத்திக்கொண்ட ஆவணம் என்றால் தவறு. இந்த ஆவணத்தின் அடிப்படையில் எந்த காலத்திலும் சொத்தின் அனுபவம் என் வசம் வரப்படவில்லை என்றால் தவறு. 13.03.2001 ல் இவ்வழக்கின் 2-ம் பிரதிவாதியான இனியவனுக்கு எழுதிவைத்த உயிலின் அடிப்படையில் அங்காளம்மை 10.04.2001 ல் இறந்த பிறகு மேற்படி உயிலானது நடைமுறைக்கு வந்து வழக்கிடை சொத்தானது இனியவனுக்கு முழு உரிமையும் சித்தித்து விட்டது என்றால் இல்லை. 2001 லிருந்து சுமார் 22 ஆண்டுகள் கழித்து இவ்வழக்கை தாக்கல் செய்தது காலாவதியால் பாதிக்கப்பட்டுள்ளது எனவும் நான் கேட்க கூடிய விளம்புகை பரிகாரமோ உறுத்துக் கட்டளை பரிகாரமோ எனக்கு கிடைக்க கூடியதல்ல என்றால் தவறு. 2022 ல் என் தாயார் எனக்கு எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணத்தை எழுதி வைப்பதற்கு என் தாயாருக்கு உரிமை கிடையாது எனவும் அனுபவமும் அவர் வசம் இல்லை என்பதால் நான் கோரியுள்ள விளம்புகை பரிகாரம் எனக்கு கிடைக்க கூடியதல்ல என்றால் தவறு. அனுபவமே இல்லாததால் நான் கோரியுள்ள உறுத்துக்கட்டளை பரிகாரமும் எனக்கு

கிடைக்க கூடியதல்ல எனவும் வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது எனவும் சொன்னால் தவறு.

நஎன் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.07.08 15:13:02 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,

திருவாரூர்.